**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure.)**
**------**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

Calender

Miscellaneous Case No. MC16/20
Priliminary Register

Sessions

Deposition of witness for Prosecution PW1

Defence

Court

Name : Kalaivani @ Seethalakshmi
Father's Name :W/o.Ganeshan
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **05.03.2021.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது திருமங்கலம் சங்கர் நகர் என்ற முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது எந்த வேலையும் செய்யவில்லை. நான் எனது தகப்பனார் வீட்டில் குடியிருந்து வருகிறேன். நான் எனது தரப்பு வழக்கினை நிரூபணம் செய்ய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். மேற்படி நான் தாக்கல் செய்த வழக்கினை நிரூபணம் செய்ய எனது தரப்பு ஆவண்களாக கடந்த 09.09.2002 மதுரை வெங்கடேஷ்வரா திருமண மண்டபத்தில் நடைபெற்ற திருமணத்தினை நிரூபணம் செய்ய எனது திருமண அழைப்பிதல் மசாஆ 1 ஆக தாக்கல் செய்கிறேன். எனது கணவர் எதிர்மனுதாரர் தந்தை போஸ் என்பவர் பெயரிலான சொத்து சர்வே எண் 12-5ன் வில்லங்க சான்றினை எனது கணவர் மேற்படி சர்வே எண் சொத்துக்களை அனுபவித்து வருவதையும் அந்த சொத்தில் உள்ள அவரது உரிமையை

நிரூபணம் செய்ய அந்த சொத்தின் கணினி நகல் மசாஆ 2 ஆக தாக்கல் செய்கிறேன். மற்றும் சர்வே எண் 45,46,88,99 ஆகிய சொத்துக்களின் சிட்டா நகல்களை கணினி நகல் எடுத்து மசாஆ3 முதல் மசாஆ 6 ஆக தாக்கல் செய்கிறேன். எனவே மேற்படி நிரூபணம் வாக்குமூலம் அத்துடன் தாக்கல் செய்த ஆவணங்களை பரிசீலனை செய்து நான் கோரிய பரிகாரத்தை வழங்குமாறு பிராத்திக்கின்றேன்.